2012 ஏப்ரல் 26]

நான் உங்களுக்கு ஏற்கெனவே சொல்லிவிட்டேன்; மூலக் கேள்வியை ஒட்டி நீங்கள் துணைக் கேள்வி கேளுங்கள் என்று. இது actual ஆக அலுவலகங்கள் அமைப்பது பற்றியது. கழிவறை கட்டுவது பற்றி அல்ல. இருந்தாலும் Minister answer பண்ணுவதற்கு நான் allow பண்ணுகிறேன். இனிமேல், இந்த practice வைத்துக்கொள்ளாதீர்கள். (குறுக்கீடு) அமைச்சர், நீங்கள் பதில் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போதே நான் குறிப்பிட்டிருக்கிறேன். மனித நேயம் மிக்க தலைவியாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் கழிப்பறை வசதிகள், அங்கே வருகின்றவர்கள் அமர்வதற்கு இருக்கைகள், ஊனமுற்றோர்களாக இருந்தால் அவர்களுக்கு சாய்வு தளங்கள், குடிநீர் வசதிகள் அனைத்தும் செய்வதற்காக அனுமதி அளித்திருக்கிறார்கள். அதை நான் அன்றைக்கு அறிவிப்பிலே வெளியிட்டிருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

169—

குடிநீர்த் திட்டம்

***4415—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, கடையம், பாப்பாக்குடி ஆகிய ஒன்றியங்களில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் இதுவரை தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக்கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்படாத 122 குடியிருப்புகள் மற்றும் பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 16 குடியிருப்புகள், ஆக மொத்தம் 138 குடியிருப்புகளுக்கு புதிய தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான திட்ட மதிப்பீடு ரூபாய் 46 கோடிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மைக் அருகில் பேசுங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம், இந்த ஆண்டு நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்திலிருந்து சுவாமிதோப்பு அய்யா கோயிலுக்குப் பேருந்து இயக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடையம், பாப்பாக்குடியிலுள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் தாமிரபரணி திட்டத்தை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்தப் பகுதியில் 4 பேரூராட்சிகள் உள்ளன. ஆழ்வார்குறிச்சி, ஆலங்குளம், கீழப்பாவூர், முக்கூடல் ஆகிய இந்த 4 பேரூராட்சிகளில் இரண்டு பேரூராட்சிகளுக்கு சங்கரன்கோவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தண்ணீர் வழங்கப்படுகிறது. இரண்டு பேரூராட்சிகளுக்கு கடையநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து தண்ணீர் வழங்கப்படுகிறது. அந்தப் பகுதியில் அதிகமாக தண்ணீர் தேவைப்படும்போது எங்களுக்குக் குறைத்துவிடுகிறார்கள். ஆகவே, இந்த 4 பேரூராட்சிகளையும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், கடையம்–பாப்பாக்குடி திட்டத்தில் இணைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

2012 ஏப்ரல் 26]

முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வினாமூலம், அவருடைய தொகுதிக்குட்பட்ட பகுதிகளுக்குத் தேவையான தண்ணீரை ஒரே கூட்டுக் குடிநீர் திட்டத்திற்குள் கொண்டு வரவேண்டுமென்று ஆசைப்படுகிறார். ஆனால் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் வாயிலாக மற்ற பேரூராட்சிகளுக்கு ஏற்கெனவே தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை மாற்றி இந்தத் திட்டத்தோடு சேர்க்கமுடியாது. இது புதிய திட்டம். விடுபட்ட பகுதிகளுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரைக் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நிதியாண்டே அறிவித்து, இந்த நிதியாண்டே எடுத்து, பணி செய்வதற்குரிய உத்தரவை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதற்காக இந்தத் திட்டத்திற்கு மட்டும் 46 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் வாயிலாக 168 குடியிருப்புகளுக்கும், இதோடு கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல குடியிருப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வைத்த கேள்வியின்படி, 138 குடியிருப்புகளோடு, 168 குடியிருப்புகளுக்கும் சேர்ந்து ரூ.46 கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டம் நடைபெறவிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் சோழவந்தான் தொகுதிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வழங்கி, அந்தத் தொகுதி மக்களுடைய தாகத்தைத் தீர்த்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். இந்த காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து வாடிப்பட்டி பேரூராட்சி விடுபட்டுள்ளது. சுமார் 25,000 மக்கள் தொகை கொண்ட அந்த பேரூராட்சிக்குட்பட்ட 10 ஊராட்சிகளும் விடுபட்டுள்ளன. அதனை காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்துடன் சேர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று வகைப்படுத்துகின்றபோது, எந்தெந்தப் பகுதிகள் எடுக்கப்படவேண்டுமோ அந்தப் பகுதிகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களை உருவாக்கி அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற மற்ற பகுதிகளுக்கு ஏற்கெனவே மற்றொரு திட்டத்தின் வாயிலாக தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கும். தண்ணீர் போதவில்லையென்று சொன்னால், கூடுதலான தண்ணீர் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

170—

குளிர்பதனக் கிடங்கு

***3703—திரு. ஆர். சந்திரசேகர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—